**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (செயற்திட்டம் - 02) - 2017.**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (செயற்திட்டம் - 02) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இலங்கை மின்சார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 3483 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04(அ) பிரிவு மற்றும் 3484 எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் நிர்வாக கைநூலின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கொன்றாக எரிசக்தி வினைத்திறனிற்காக பரிமாற்றக் கட்டமைப்பை உயர்த்துதல், வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் கேள்விப் பக்க முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றை நிகழ்ச்சித்திட்டம் இலக்கிடுகின்றது. நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 37,895 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் தொகையானதுடன் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியில் ஏற்பாடு கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| **மூலம்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி | | |
| - சாதாரண மூலதன வளங்கள் (ஓசீஆர்) கடன் | 95.00 | 13,846.25 |
| - ஆசிய அபிவிருத்தி நிதிய கடன் | 55.00 | 8,016.25 |
| பிரான்சிஸ் அபிவிருத்தி முகவர் கடன் | 30.00 | 4,372.50 |
| இலங்கை அரசாங்கம் | 80.00 | 11,660.00 |
| **மொத்தம்** | **260.00** | **37,895.00** |

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் மீள்நிரம்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டு பதிவுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ்செய்யப்பட்டிருந்தது என்பதும்,

(ஈ) நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூலை 18 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்த நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம்

### 3.1 நிதியங்களின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | பயன்படுத்திய நிதிகள் மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | | | | | | | |
| 3483 - எஸ்ஆர்ஜ | 95 | 13,846.25 | 5,022 (3483, 3484 இரண்டுக்கும்) | 0.93 | 144.17 | 0.93 | 144.17 |
| 3484 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) | 55 | 8,016.25 | | - | - | - | - |
| ஏஎவ்டீ | 30 | 4,372.50 | - | - | - | - | - |
| சீஈபி | 80 | 11,660.0 | 214 | 1.17 | 175.38 | 1.63 | 241.66 |
| **மொத்தம்** | **260** | **37,895.00** | **5,236** | **2.10** | **319.55** | **2.56** | **385.83** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகளானது பரிமாற்ற உட்கட்டமைப்பை உயர்த்தல், நடுத்தர மின்வலு வலையமைப்பின் வினைத்திறனை உயர்த்தல், மின்சக்தி வினைத்திறனிற்காக கேள்விப்பக்க முகாமைத்துவத்தை உயர்த்துதல் போன்ற 03 கூறுகளின் கீழ் உள்ளடங்கியுள்ளது. மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் கீழ் வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

(அ) ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைதலை உறுதிப்படுத்தவதற்கு உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்களை நிர்ணயிப்பதன் மூலம் பட்டியல்படுத்தப்பட்ட கால நேரத்தில் நிதிகள் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்ட உடன்படிக்கைகள் 2016 யூன் 30 அளவில் கையொப்பமிடுவதற்கு வேண்டியிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 செப்தெம்பர் 30 அளவில் தொடங்கப்பட வேண்டியிருந்தது. எனினும், உரிய செயற்திட்ட உடன்படிக்கைகள் 2016 திசெம்பர் 27 இல் மாத்திரம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இது 2017 யூலை 10 இல் செயற்பாட்டிற்கு வந்தது.

(இ) அங்கீகார வணிகத்தின் அபிவிருத்தியின் நிதி உதவியின் கீழ் ஐ.அ.டொலர். 17.5 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளானது இலங்கை அரசாங்கத்தால் கடனளிக்கும் முகவருடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளாமையால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் கூறு-01 இன் கீழ் பொலிபிற்றியாவிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கு 150 கிலோமீற்றர்களின் புதிய பரிமாற்றம் வரிசை மீதான வேலைகள் அம்பாந்தோட்டையிலுள்ள கிறீட் உப நிலையத்தின் அபிவிருத்தி மீதான விலைமனு செய்முறை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், மஹாலாபாலம, எத்தஹல, சீனா வே, சூரியவெவா மற்றும் பெந்தோட்டவில் இலத்திரனியல் இணைப்புக்களின் 60 கிலோமீற்றர்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கூறு - 02 இன் கீழ் மஹாலபாலம, எத்தஹல, சீனா வே மற்றும் பெந்தோட்ட பிரதேசங்களில் 04 கான்ரிஸ்கள் நிர்மாணிப்பதற்கு நடுத்தர மின்வலு ஆவணங்கலானது கடனளிக்கும் முகவரால் 2017 திசெம்பர் 15 இல் மாத்திரமேயே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வெலிஹஹ மற்றும் எத்துல்கோட்டாவிலுள்ள முதற்தர உபநிலையங்களை பெருக்குதறைகள் பெறுகை செயன்முறையானது கூறு - 03 இன் கீழான ரூபா 10.41 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழான றற்னப்பிற்றியவிலுள்ள முதற்தர உப நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் கூறு 03 இன் கீழான மின் சக்தி விளைத்திறன் நோக்கங்களிற்கான கேள்விப்பக்க முகாமைத்துவத்தின் முன்னேற்றத்தின் மீதான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு 2017 திசெம்பர் 31 இலும் நிகழ்ச்சித்திட்டமானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 3.3 நிதிசார் கட்டுப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 முக்கிய கூறுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையின் 03 தனிப்பட்ட பிரதேச தலைமைகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்தமையால் முறையான ஒருங்கிணைப்பின்மையால் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டது. இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட அனைத்து நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களானது நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு சிரேஸ்ட உத்தியோகத்தரால் கண்காணிக்கப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தரின் சார்பில் மீளாய்வாண்டின்போது நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 8.34 மில்லியன் கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 15 இன் டீஎம்ஏ/டீ/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 10 மில்லியன் மொத்த மதிப்பீட்டு கிரயத்தை விஞ்சிய நன்கொடையளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக உள்ளகக்கணக்காய்வளரொருவர் நியமிக்கப்பட வேண்டும். எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மீது முறையான கண்காணிப்பு பொறிமுறைகளை ஸ்தாபிப்பிற்கு இயலாதிருந்தது.

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தியோகத்தர்களின் வதிவிட நோக்கங்களிற்காக திருகோணமலை அனுராதபுரம், எம்பிலிப்பிற்றிய மற்றும் ஹம்பொலவிள்ள வீடுகளை நிகழ்ச்சித்திட்டம் வாடகைக்கெடுத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 977,000 தொகையை செலவழித்திருந்தது. இது தொடர்பில் எந்தவித எழுத்துமூல உடன்படிக்கைகள் இல்லாதிருந்ததுடன் குறித்த நோக்கங்களினை உரிய வதிவிடங்களின் பயன்பாடைந்திருப்பதற்காக ஏனைய பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருந்தது.